தினத்தந்தி (02.03.2020)



# மாநில அளவிலான பூப்பந்தாட்ட போட்டிகள்

## வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு

வேலாயுதம்பாளையம், மார்ச்.2-
தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தமிழ்நாடு மாநில பூப்பந்தாட்ட கழகம் சார்பில் மாநில அளவிலான பூப்பந்தாட்ட போட்டிகள் டி.என்.பி.எல். விளையாட்டு மைதானத்தில் 2 நாட்கள் நடைபெற்றன. போட்டியில் சென்னை, மதுரை, கோவை, கடலூர், திருச்சி, காஞ்சிபுரம், திண்டுக்கல், சேலம், திருவாரூர், தூத்துக்குடி, கரூர், தஞ்சை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து 84 அணிகள் கலந்து கொண்டன. போட்டியை டி,என்,பி,எல் செயல் இயக்குனர் (இயக்கம்) எஸ். ஆர். வி. கிருஷ்ணன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தனர். போட்டிகள் ஆண்கள் அணி, பெண்கள் அணி என தனித்தனியாக நடைபெற்றன. இதில் ஆண்களுக்கான போட்டிகள் லீக் மற்றும் சூப்பர் லீக் முறையிலும், பெண்களுக்கான போட்டிகள் நாக் அவுட் முறையிலும் நடத்தப்பட்டன. பின்னர் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் ஆண்கள் அணியில் முதலிடம் பெற்ற காஞ்சிபுரம் அணிக்கு ரூ,20ஆயிரம் மற்றும் கேடயத்தை.டி.என்.பி.எல். பொது மேலாளர் (வணிகம்) சுப்பரமணி வழங்கினார். பெண்கள் அணியில் முதலிடம் பெற்ற மதுரை அணிக்கு ரூ.9 ஆயிரம் பரிசுத்தொகையும், கேடயத்தை டி.என்.பி.எல். பொது மேலாளர் பட்டாபிராமன் (மனிதவளம்) வழங்கினார்.